இறையரசு மலர

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 15 NOVEMBER - 2019 No. 11**

**Dear Fathers, Brothers and Sisters,**

May Christ, the King and the communion of saints bless us and help us to mature in our holiness. May the Souls of faithful departed intercede for us and souls in purgatory rest in Eternal peace! In the Christian liturgical calendar, November is entirely devoted to pray for the deceased faithful. We, the members of militant Church pray for the members of Souls in Purgatory (Suffering Church), they, along with the members of Triumphant Church in Heaven pray for us. In this way we live in communion with the Saints which we profess in our Creed. Hence, this month gives us scope to renew our call to grow in holiness.

As we are going to have our Annual Retreat, I invite every one of you to pray more and more for our spiritual maturity and conformity in and with Christ. In line with the words

of Teilhard de Chardin “We are not human beings having a spiritual experience. We are spiritual beings having a human experience,” let us try to make use of this retreat to have a strong spiritual experience which will enable us to go ahead in our pastoral ministry. Let us also spend our time to meditate upon the communion of Saints and pray for departed souls of our dear and near ones and also recall the warmth of Our Christ, the King who grants all the necessary blessings for our spiritual nourishment. Definitely, I hope this retreat will rejuvenate our priesthood.

May our hearts glorify God for the great life of Saints. The Church offers the life of saints to us as the glorious example of our faith. We should be interested in the life of saints as they are normal human beings like us who lived a life in perfect commitment to Jesus. It is much easier to relate to the life of saints or learn from them as they are like you and me who strive to follow Jesus. Saints, in general, lived a good life. Some had to struggle through their own weaknesses. St. Peter denied Christ three times before he professed his love for Christ thrice. St. Paul was persecuting Christians before he became a zealous preacher who travelled the world to proclaim the good news. It is the conversion story of the lives of saints that causes an impact on us.

“Eternal rest grant unto them O Lord; and let the perpetual light shine upon them.” It is my prayer to our departed Bishops, Priests, Religious and the people of God who worked for the betterment of our Diocese. In a special way I pray for the repose of the souls of our beloved mothers, fathers, brothers and sisters. On All Soul’s Day, we are called to remember our loved ones who died and to pray for their joyful reunion with the Lord. Throughout our lives, we must happily say goodbye to those who go before us to their eternal rest. Though we mourn our loss, yet we seek ways to maintain their legacies by honouring them in special ways. “Death” literally *means* ‘separation’. When our soul separates from our body we die physically. Similarly we are even now separated from God spiritually. So what we naturally try to do is to build bridges to take us from our side (of death) to God’s side. We do this in many different ways: going to church, being spiritual, being good, helping the poor, meditation, trying to be more helpful, praying more, etc.

Soon we will begin the Season of Advent; our time for Christmas starts with the reflection upon Christ our King. When Jesus was asked by Pilate if he was a king, Jesus said that he was a king. So, what sort of King was Jesus? Jesus was born in a small, poor and unimportant village. His parents were not famous, powerful or wealthy. His

first visitors were the poorest people especially shepherds. He didn't dine with rich and powerful people. He never led an army into battle. He did ask people to take up their cross and follow him. He didn't surround himself with politicians, soldiers or bankers. He spent his time with the poor, the sick, the broken and all those who were in need of love, healing and compassion. Our king always prefers to be found in the hungry, the thirsty, the naked, the homeless, the poor, the rejected and those in prison. We are to turn our attention to each other if we want to find Jesus. This feast asks us to draw on the presence of Christ who dwells within each other.

I am happy to express my thanks to Rev. Fr. Vincent, the Parish Priest of Gengapattu and Rev. Fr. J. Jeyaprakasam, the Director of Pious Association for organizing the Diocesan Rosary Convention in a systematic manner. May Christ the King and the communion of Saints strengthen our spirituality to mature in our faith.

Yours in Christ Jesus

**+ Most Rev. Dr. P. Soundararaju, SDB.,**
Bishop of Vellore

**Bishop's Programme**

| | | | |
|---|---|---|---|
| 02 | Sat | | Holy Mass at Cathedral – Vellore |
| | | E | Holy Mass at Old Town Cemetery |
| 03 | Sun | | Baptism at Kolappalur |
| 04 | Mon | | SC/ST Meeting - Vellore |
| 09 | Sat | | Silver Jubilee Mass, Pallavaram |
| 10 | Sun | M | Confirmation – Old Towm |
| | | M | Laity Commission meeting - Vellore |
| 15 | Fri | | Annual Day, MSFS – Vaniyambadi |
| 17 – 22 | | | Diocesan Annual Retreat, Poondi |
| 23 | Sat | | Meeting with Nuncio - Chennai |
| 24 | Sun | | Eucharistic Convention - Chennai |
| 29 | Fri | | St. Anne's – Gudiyatham |

**+ Most Rev. Dr P. Soundararaju, SDB**
Bishop of Vellore

## VICAR GENERAL'S OFFICE

**Annual Retreat – 2019**

The annual retreat for the clergy begins on Sunday November 17 evening and ends on Saturday 23 morning at Poondi Retreat centre.

All are expected to attend the retreat without fail. The preacher is Rev. Fr.Gnana Doss, Diocese of Ooty . Kindly bring your Bible and Breviary along with two mass diaries (Personal and Parish). Anyone wants to be absent for special reason has to get permission from the Bishop.

Three important Notes:

1. All are expected to bring your own toilet and stationery things.
2. Kindly cooperate to accomadate yourself within the given arrangements.
3. All are expected to come to Poondi on your own.

**Christmas Celebration for CRI - __ December 2019**

The Christmas Celebration for the religious Fathers, Brothers and Sisters will take place on Saturday 14 December 2019 at 10 a.m. His Excellency Most Rev. Dr. P. Soundararaju, SDB., will preside over the celebration. You can take this opportunity to wish our Bishop and Curia fathers. Your generous contribution would be greatly appreciated to help the poor during this Christmas.

**Christmas Celebration for the Clergy – 18 December 2019**

Monthly Recollection and Christmas Celebration will be on Wednesday 18 December 2019. The time Table will be as follows

09.30 - Arrival & Coffee
10.00 - Talk
11.00 - Adoration & Confession
11.45 - Christmas Celebration & Message
12.30 - Lunch

**Very Rev. Msgr. I. John Robert**
Vicar General

## மேய்ப்புப்பணி நிலையம்

**பங்குப் பேரவை உருவாக்கம் மேல்புதுப்பாக்கம்** – பங்கில் அன்பிய குடும்பங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைப்பற்றி பங்குத்தந்தை மற்றும் வேதியர் சாமுவேல் அவர்களால் முறையான பயிற்சி 5 நாட்கள் அளிக்கப்பட்டது. அதன்பின் 15.08.2019 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பங்கு பேரவைப்பற்றி கருத்துரை கொடுக்கப்பட்டது. துணைத் தலைவர், செயலாளர், பங்குத்தந்தை ஆனந்தராஜ் தலைமையில் பங்குப்பேரவை பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வேலூர் மறைமாவட்ட ஒழுங்குமுறைப்படி பங்குத்தந்தை அருட்பணி. ஆனந்தராஜ் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு 20.10.2019 ஞாயிறு திருப்ப-யில் ஆயரின் பிரதிநிதியான மேய்ப்புப்பணி நிலைய இயக்குனர் அருட்பணி. ரமேஷ் அந்தோணி அவர்களால் பணியேற்பு அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குப்பேரவை உறுப்பினர்கள் பணிப்பொறுப்பு ஏற்றுக்கொண்டார்கள்.

**வேலூர் மறைவட்டம் மறைக்கல்வி :**

**நன்னெறிப் பாடங்கள் ஆய்வு :** வேலூர் மறைவட்டத்தில் உள்ள கத்தோ-க்க பள்ளிகள் ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, கணியம்பாடி; புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, அ.கட்டுபடி;

குழந்தை யேசு மெட்ரிக்பள்ளி, இடையன்சாத்து; ஆர்.சி.எம்.நடுநிலைப் பள்ளி, ஆங்கில தொடக்கப்பள்ளி, ஓல்டுடவுன்; புனித தொன்போஸ்கோ உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, வேலூர்; சாவியோ மெட்ரிக் பள்ளி, வேலூர்; புனித திரெசா உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, பள்ளிகொண்டா; சிறுமலர் தொடக்கப்பள்ளி, பள்ளிகொண்டா ஆகிய பள்ளிகள் மேய்ப்புப்பணி இயக்குனர் தந்தை ரமேஷ் அந்தோணி தலைமையிலான குழு அக்டோபர் மாதம் 24, 25, 26 தேதிகளில் மறைக்கல்வி / நன்னெறி பாடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. பள்ளி தாளாளர், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்கள் பிள்ளைகளை நன்கு தயாரித்து இருந்தனர். மறைக்கல்வி / நன்னெறி பாடங்கள் ஆய்வு செய்யும்போது பிள்ளைகள் ஆர்வமாக பதில் அளித்தனர். மேலும் ஆசிரியர்களின் வகுப்பு பாடக் குறிப்புகளும் பாடக் கருவிகளும் பார்வைக்கு வைக்கப்படது. பின்பு இயக்குனர் அவர்கள் மறைக்கல்வி / நன்னெறி ஆசிரியர்களைச் சந்தித்து இன்றைய கால சூழ்நிலையில் மறைக்கல்வி / நன்னெறிப் பாடத்தின் முக்கியத்தைப் பற்றி விளக்கம் கொடுத்தார். மறைக்கல்வி / நன்னெறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு கேடயமும் சான்றிதழும் ஒவ்வொரு பள்ளியிலும் காலை கூடுகையில் மேய்ப்புப்பணி இயக்குனர் தந்தை அவர்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து உற்சாகப்படுத்தினார். பள்ளி தாளாளர் / தலைமையாசிரியர்கள் ஆய்வு சிறப்பாக நடைபெற உதவி புரிந்தார்கள்.

**<u>போளூர் மறைவட்டம் மறைக்கல்வி</u>**

**நன்னெறிப் பாடங்கள் ஆய்வு :** மறைவட்டத்திலுள்ள கத்தோ-க்க பள்ளிகள் மேய்ப்புப்பணி இயக்குனர் தந்தை ரமேஷ் அந்தோணி தலைமையிலான குழு அக்டோபர் மாதம் 28, 29, 31 தேதிகளில் மறைக்கல்வி / நன்னெறிப் பாடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. பள்ளி தாளாளர், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள்

பிள்ளைகளை நன்கு தயாரித்து இருந்தனர். மறைக்கல்வி / நன்னெறிப் பாடங்கள் ஆய்வு செய்யும் போது பிள்ளைகள் உற்சாகமாக பதில் அளித்தனர். மேலும் ஆசிரியர்களின் வகுப்பு பாடக் குறிப்புகளும் பாடர் கருவிகளும் தயார் செய்து வைத்தனர். ஆசிரியர்களைச் சந்தித்து மறைக்கல்வி / நன்னெறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு கேடயமும் சான்றிதழும் ஒவ்வொரு பள்ளியிலும் காலை கூடுகையில் மேய்ப்புப்பணி இயக்குனர் தந்தை அவர்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து உற்சாகப்படுத்தினார். பள்ளி தாளாளர் / தலைமையாசிரியர்கள் ஆய்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு கொடுத்தார்கள்.

**<u>தாளாளர் தலைமை ஆசிரியர் கவனத்திற்கு</u>**

மறைக்கல்வி / நன்னெறித் தேர்வுகள் : 10, 11, 12 ஆம் வகுப்புகளுக்கு மறைக்கல்வி / நன்னெறி மறைமாவட்ட ஆண்டுத்தேர்வு நவம்பர் மாதம் 29.11.2019 வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் 12.30 வரை அந்தந்த பள்ளிகளில் தேர்வு நடைபெறும். எனவே வினாத்தாள் எண்ணிக்கை உடனடியாக தெரிவிக்குமாறும் பிள்ளைகளை நன்றாக தயாரிக்குமாறும் பள்ளி தலைமை ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பள்ளி தாளாளர்கள் இதற்கு ஒத்துழைக்க அன்புடன் வேண்டுகின்றேன்.

**<u>குடும்பநல பணிக்குழு</u>**

திருவண்ணாமலை உலக மாதா ஆலயத்தில் திருமணத் தயாரிப்பு வகுப்பு 05.10.2019 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடத்தப்பட்டது. திருவண்ணாமலை மறைவட்ட முதன்மை குரு

அருட்தந்தை ஞானஜோதி, வேதியர் சாமுவேல் மற்றும் செவி-யர்கள் வகுப்புகளை நடத்தினர். இதில் 42 பேர் கலந்துக்கொண்டு பயன் பெற்றனர்.

வேலூர் ஆயர் இல்லத்தில் திருமணத் தயாரிப்பு வகுப்பு 19.10.2019 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடத்தப்பட்டது. அருட்தந்தை **L.ரமேஷ் அந்தோணி**, வேதியர் சாமுவேல் மற்றும் செவி-யர்கள் வகுப்புகளை நடத்தினர். இதில் 27 பேர் கலந்துக்கொண்டு பயன் பெற்றனர்.

**வருகின்ற நவம்பர் மாத திருமண தயாரிப்பு வகுப்பு**

16.11.2019 - மூன்றாம் சனிக்கிழமை, வேலூர், ஆயர் இல்லம்

அருள்தந்தை முனைவர். **L.ரமேஷ் அந்தோணி**
இயக்குனர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்.

## STATEMENT OF RECEIPT

### Poor Children Education Fund
### From 22.09.2019 to 15.10.2019

| S.NO | NAME OF THE SCHOOL / INSTITUTION | AMOUNT |
|---|---|---|
| 62 | St.Mary's Nursery and Primary School, Vellore (Staff) | 6130 |
| 63 | St.Mary's Nursery and Primary School, Vellore (Students) | 870 |
| 64 | St.Joseph Matric Hr.Sec. School, Veppoor | 12000 |
| 65 | Sacred Heart Matric Hr.Sec. School, Arakkonam | 7102 |
| 66 | Savio Matriculation School, Vellore Cathedral (Staff) | 3000 |
| 67 | Savio Matriculation School, Vellore Cathedral (Students) | 1062 |

I thank sincerely all the Principals, Headmasters, Headmistresses and children of Educational Institutions

run by the Religious congregations for their generous financial contribution towards the Poor Children Education - Fund. Those who are yet to contribute to the fund may please send the amount as early as possible.

**Fr. S.A.S. Clement Rosario**
Manager – RCM Schools

## VELLORE & THIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

**09.10.2019** தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் திரு. ஜான் மகேந்திரன் அவர்கள் தலைமையில் அக்டோபர் 9, 10 ஆகிய தேதிகளில் திருவண்ணாமலை & வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. திருவண்ணாமலையில் நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் பேரருட்திரு. ஜேம்ஸ் அவர்களும், திருவண்ணாமலை மாவட்ட அருட்தந்தையர்களும் கலந்துக்கொண்டனர். இயக்குனர் அவர்கள் இக்கூட்டத்தில் பேசும்போது கிறிஸ்தவ கல்லறை பிரச்சினை, சிறுபான்மையினர் பள்ளிகளில் நிலவுகின்ற பிரச்சினைகள், கிறிஸ்துவ த-த் மக்களின் பிரச்சினைகள் ஆகியவற்றை எடுத்துக் கூறினார். இவற்றுக்கான தீர்வுகளை சிறுபான்மையின வாரிய தலைவர் அவர்கள் முன்னின்று தீர்த்துவைக்க கேட்டுக்கொண்டார்.

**10.10.2019** : வேலூர் மாவட்ட சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆய்வுக் கூட்டத்தில் கலந்துக்கொள்ள வந்த ஆணையத் தலைவர் திரு. ஜான் மகேந்திரன் அவர்களை வேலூர் மறைமாவட்ட ஆயர் மேதகு முனைவர் பெ.சௌந்தரராஜு அவர்களுடன் வேலூர் சமூக சேவை சங்க இயக்குனர் பேரருட்திரு. ஜேம்ஸ் அவர்கலும், திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் அவர்களும் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

அச்சமயம் சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அவர்கள் பேசும்போது, பெரும்பாலான மத்திய மாநில அரசு நலத்திட்டங்கள் இருக்கின்றன என்றும், இதனைப்பற்றி மக்களுக்குப் போதிய விழிப்புணர்வும், வழிமுறைகளும் தெரியவில்லை என்றார். ஆகவே, வேலூர் கத்தோ-க்க கிறிஸ்துவ மக்களுக்கு திட்டத் தெளிவு ஏற்படுகின்ற வகையில் சிறப்புக் கூட்டத்தில் ஆயர் அவர்களின் அழைப்பை ஏற்று கூட்டத்திற்கு வருவதாக சம்மதித்தார்.

இதன்பின் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கருத்துக்கேட்பு ஆய்வு கூட்டத்தில் வேலூர் சமூக சேவை சங்க இயக்குனர் பேரருட்திரு. ஜேம்ஸ் அவர்கள் தலைமையில் 10 அருட்தந்தையர்களும், 15 அருட்சகோதரிகளும், பெரும்பாலான சிறுபான்மை கிறிஸ்தவ மக்களும் கலந்துக்கொண்டனர். இக்கூட்டத்தில் முதல் முறையாக 5 கிறிஸ்துவ விதவைகளுக்கு நல உதவி வழங்கப்பட்டது.

**19.10.2019 :** திருச்சி டாசோஸ் நிறுவனத்தின் இணை இயக்குனர் அருட்திரு. ஆரோக்கியசாமி அவர்களும், கள அலுவலர் திருமதி. நிர்மலா அவர்களும் வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் நடைபெறும் டாசோஸ் திட்டங்களை வேலூர் & திருவண்ணாமலை இயக்குனர் பேரருட்திரு. ஜேம்ஸ் மற்றும் பணியாளர்களோடும் இணைந்து கலந்துரையாடலும், திட்டம் திறம்பட செயல்பட வழிமுறைகளும் விவாதிக்கப்பட்டன. இயக்குனர் அவர்கள் டாசோஸ் நிறுவனத்திற்கும், இயக்குனர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

செய்தி தொகுப்பு

திரு. A.**பேட்ரிக்**
VSSS திட்ட மேலாளர்

பேரருட்திரு. S.**ஜேம்ஸ்,**MSW
இயக்குனர், VSSS & TVMSSS

## கோல்பிங் இந்தியா / வேலூர் மறைமாவட்டம்

24.09.2019 : செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் பு-வானந்தல் பங்கில் திருப்ப-யுடன் அதனை தொடர்ந்து புதியதாக கோல்பிங் இயக்கம் தொடங்கப்பட்டது. மேலும் கங்காபுரம் பங்கில் உள்ள மக்களுக்கு கோல்பிங் இயக்கத்தின் புதிய குழு தொடங்கப்பட்டது. வேலூர் சமூக சேவை சங்க இயக்குனர் பேரருட்திரு. ஜேம்ஸ் அவர்கள் கோல்பிங் கொள்கைகளைப் பற்றி எடுத்துரைத்தார். கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஜார்ஜ் அவர்கள் இயக்கத்தின் தோற்றம், தந்தை அடால்ப் கோல்பிங் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் இயக்கத்தின் சட்டத்திட்டங்கள், செயல்பாடுகள், சிறுசேமிப்பு, சங்கம் நடத்தும் முறை ஆகியவைப்பற்றி விளக்கம் அளித்தார். இதில் 40 பேர் கலந்துக்கொண்டு புதிய உறுப்பினர்களாக பதிவு செய்துக்கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பங்குதந்தை அருட்திரு. பாக்கியராஜ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

28.09.2019 :சனிக்கிழமை அன்று மாலை 6 மணியளவில் காரியந்தல் பங்கின் கிளை பங்கான நாயுடுமங்களத்தில் புதியதாக கோல்பிங் இயக்கம் தொடங்கப்பட்டது. வேலூர் சமூக சேவை சங்க இயக்குநர் பேரருட்திரு. ஜேம்ஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று முன்னுரை வழங்கினார். கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஜார்ஜ் அவர்கள் இயக்கத்தின் தோற்றம், கோல்பிங் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் இயக்கத்தின் சட்டத்திட்டங்கள், செயல்பாடுகள், சிறுசேமிப்பு, சங்கம் நடத்தும் முறை ஆகியவைப் பற்றி விளக்கம் அளித்தார்.

15 உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு புதிய உறுப்பினர்களாக பதிவு செய்து பயனடைந்தனர்.

செய்தி தொகுப்பு

| | |
|---|---|
| திரு. V.S. **ஜார்ஜ்** | பேரருட்திரு. S.**ஜேம்ஸ்,**MSW |
| ஒருங்கிணைப்பாளர் | இயக்குநர், சமூக சேவை சங்கம் வேலூர் |

## இந்திய ஆயர் பேரவையின் பொதுநிலையினர் கருத்தரங்கு, வாரணாசி

அகில இந்திய ஆயர் பேரவையின் பொதுநிலையினர் பணிக்குழு தேசிய கருத்தரங்கு 28-29 ஆகிய தேதிகளில், செப்டம்பர் 2019 அன்று பொதுநிலையினர் பணிக்குழுவின் தேசிய தலைவர் வாரணாசி ஆயர் மேதகு யூஜின் ஜோசப் அவர்கள் தலைமையில் வாரணாசியில் உள்ள நவ சாதனா என்ற மாநில மேய்ப்புப் பணி மையத்தில் நடைபெற்றது. "எழுச்சியுடன் உயிரோட்டமுள்ள திரு அவைக்காக பொதுநிலையினரை உயர்த்தி அதிகாரப்படுத்துதல்" என்ற கருப் பொருளில் 5 அமர்வுகளாக இந்த கருத்தரங்கு நடைபெற்றது. முதல் அமர்வில் பொதுநிலையினர் பணிக்குழு அதன் தொலைநோக்குத் திட்டங்கள். செயல்பாடுகளில் சந்திக்கும் சவால்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி பணிக்குழு தேசிய செயலர் அருட்பணி. அந்தோணி பெர்னான்டஸ் அவர்கள் விளக்கமளித்தார்கள். அவைகளில் முக்கியமானவைகளாவன. பொதுநிலையினர் பணிக்குழு அன்பியப் பணிக்குழுவுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பங்கேற்பு அமைப்புகளை பலப்படுத்த முடியும். இதனால் பங்குப்பேரவை நிதிக்குழு ஆகியவைகளை மேம்படுத்தி நன்றாக செயல்பட வைக்க முடியும். இது முக்கியமான மேய்ப்புப்பணி செயல்பாடாக அமையும் என்று இந்திய ஆயர் பேரவை வழிகாட்டுகிறது. நமது தொலைநோக்குப் பார்வை, பொதுநிலையினர் தங்களின் தகுதி மற்றும் இருப்பிற்கேற்ப சீடத்துவ வாழ்க்கை வாழ்ந்து நற்செய்தி

அறிவிப்பாளர்களாக உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் பொதுநிலையினரை அதிகாரப்படுத்தி திருஅவையை உயிரோட்டமுள்ளதாக மாற்றுவதாகும் இதற்கான செயல்பாடுகளாக அவர்களின் சமூக பொருளாதார அரசியல், இயற்கைச் சூழல் மற்றும் வழிபாட்டுமுறைகள் ஆகியவற்றை அலசி ஆய்ந்து அவைகளைப் பற்றிய புரிதலை அவர்களுக்கு அளித்தல். மேய்ப்பு பணிகளில் அவர்களைப் பங்கேற்க வைப்பதன் மூலம் ஒரு பொதுவான சமூக சிந்தனையை. கூட்டுப் பொறுப்புடன் தங்கள் நிலைப்பாட்டை உணர்ந்து, .கடமைகளை நிறைவேற்றி, இறையாசியைக் கட்டியெழுப்பத் தூண்டுவது. மேலும், அன்றாடம் அவர்களின் சிந்தனைகளில் இறையாட்சியின் விழுமியங்களை விதைத்து இறையாட்சியின் புதிய சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது. அதாவது அறிவித்தல் பங்கேற்றல், மாற்றுதல் என மூன்று வழிகளில் செயல்பாடுகள் அமைய வேண்டும். குழு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. குழு ஆய்வின் முக்கிய வெளிப்பாடுகளாக அன்பியம், குடும்பம், அரசியல், நற்செய்தி அறிவிப்பு போன்ற இதர பணிக்குழுக்களுடன் இணைந்த செயல்பாடுகள் இருக்க வேண்டும். பணிக்குழுக்களுக்குள் அடிக்கடி உரையாடல் தேவை. இது மேய்ப்புப் பணிகளில் எதிர்கால திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளைப் பரவலாக்கம் செய்ய உதவும்; மேலும் தேவையற்ற விரயங்கள் தவிர்க்கப்படும்.

இரண்டாம் அமர்வில் மும்பை மறைமாவட்டத்தைச் சேர்ந்த திருவாளர் அட்ரியன் ரொசாரியோ அவர்கள் தற்போதைய அறிவியல் வளர்ச்சியின் அடிப்படையில் பல்வேறு வயதில் ஏற்படும் உளவியல் மாற்றங்கள் அதனால் ஏற்படும் சிக்கல்கள், அணுகுமுறைகள் பற்றி மக்கள் தொகை சார்ந்த புள்ளிவிவரங்கள் அடிப்படையில் விளக்கினார்கள். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சமூகவலைத் தளங்களில் கலந்துவிட்ட வாழ்க்கைச் சூழ-ல் ஒவ்வொருவரின் வயது, குடும்பச்சூழல், வருவாய், தலைமுறை மாற்றம் ஆகியவற்றை கருத்தில்

கொண்டு அதற்கேற்றவிதமாகத் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ தொடர்ந்து கவனமுடன் இறையாட்சிப் பணிகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

மூன்றாம் அமர்வு, மும்பை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. பெ-க்ஸ் அவர்கள் பொதுநிலையினரை அவர்களின் நம்பிக்கை வாழ்க்கையில் ஒருமுனைப்படுத்துவது பற்றிய தெளிவினை மூன்று நிலைகளில் வெளிப்படுத்தினார். அதில் முதலாவதாக, திரு அவையில் நாம் சந்திக்கும் அகச்சவால்களாக ஒருவரை ஒருவார் கண்டுகொள்ளாமை, தன்னை முதன்மைப்படுத்துவது, அவசியமில்லாதவைகளில் அதிக கவனம் செலுத்துதலாகும். திரு அவை நமக்கு அளிக்கும் மேன்மையான அழைப்பு என்பது திருமுழுக்கு வழியாக பொதுக்குருத்துவத்தில் நம் இறையாட்சித் தொடர் பயணத்தில் நற்செய்தி அறிவிப்பு. அடுட்திருப்பவருக்குப் பணி செய்து இயற்கையைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் அழைப்பின் மேன்மையை உணர்த்தலுமாகும். இது தனிப்பட்ட முறையில் சாத்தியமாக்கப்பட வேண்டும். த-த் திருஅவையில் பங்கேற்பு அமைப்புகளில் தங்களின் தனித்துவமான பணிகளில் மறையுட-ன் உறுப்புகளாக இணைந்து செயல்படுவது; இதற்காக தொடர் பயிற்சிகளின் மூலம் ஒருங்கிணைந்த உருவாக்கம் கொடுக்கப்பட வேண்டும். இறுதியாக அவர் அளித்த வழிகாட்டு முறைகளாக மகிழ்வுடன் தாமாக முன்வந்து பணி செய்யப் பழகுதல் (இயேசு - சமாரியப் பெண் - யோவா 4:39-42). பணியில் நுணுக்கங்களைப் புகுத்துதல். மேலும் பொறுப்புகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல் கணக்கு கொடுக்கவும் பழக்கவேண்டும். பயிற்சிக்கான செலவுகள் முதலீடுகளாகக் கருதப்படவேண்டும். பங்கேற்க மனமில்லா-தவர்களையும் பங்கேற்க வைக்க வேண்டும். வெறுமனே பயிற்சி என்று மட்டுமல்லாது. தலைமைத்துவப் பண்புகளை வளர்த்து அவர்களை முழுமையான தலைவர்களாக உருவாக்கம் செய்ய வேண்டும். வெறும் தொடர்புகளோடு மட்டும் நின்றுவிடாமல்

வேற்றுமைகளை களைய தொடர் உரையாடலும் அவசியமாகும் என்று அறிவுறுத்தப்பட்டது.

நான்காம் அமர்வு, பொதுநிலையினர் இணை நற்செய்தி அறிவிப்பாளர் என்று தலைப்பில் ஜனவரி 2019 அன்று செங்கல்பட்டு மறைமாவட்டத்தில் "நற்செய்தியின் மகிழ்ச்சி" என்ற கருப்பொருளில் நடைபெற்ற அகில இந்திய கத்தோ-க்க ஆயர் பேரவையின் 31வது பொதுக்குழுக் கூட்டத்தின் மட--ருந்து பொதுநிலையினருக்கான பல்வேறு பரிந்துரைகள் விளக்கப்பட்டன. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஊக்கமடல் உத்வேகமுடன் ஆழமான சீடத்துவ வாழ்வு வாழ நம்மை பணிக்கிறது. யோவான் நற்செய்தியில் கூறியபடி "என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவும்" (யோவா 15:11) ஆர்வமுடன் மகிழ்ந்து இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றுவோம் என்று திருத்தந்தையின் இந்த அழைப்பு கூறுகிறது.

நற்செய்தியின் மகிழ்வை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள பல அக புற சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவைகளில் முக்கியமாக எதிர்ப்புகள், கலவரங்கள் மூலம் நாம் எதிர்கொள்ள வேண்டிய பய உணர்வும் மற்றும் உருவாக்கிகொள்ள வேண்டிய தன்னம்பிக்கையும் மன உறுதியும் அடுத்ததாக நாம் வசதியாக நிறுவனங்களுக்குள் பாதுகாப்பாக இருக்க விரும்பும் நிலை மத அடையாளங்களையும் வழிபாட்டு இடங்களையும் அச்சுறுத்தி தங்களுக்கே உரிமையாக்கிக்கொள்ளும் ஆதிக்க ஜாதி வெறி சக்திகள், ஏழைகளை நசுக்கி வசதிமிக்கவர்களுக்குப் பணிவிடை செய்யும் இன்றைய அரசியல் பொருளாதார சூழல் மற்றும் உண்மையான செய்திகளை மறைத்து, பொய்யான செய்திகளை உண்மைபோல் வெளியிடும் ஊடகங்கள் ஆகியவையாகும். இவைகளை மேற்கொள்ள நமது பலமான அடித்தளங்களாக இருப்பவை திருவிவி-யமும் திருஅவையின் போதனைகளும்; தூய பவுல் அடியார் திமோத்தேயுவுக்கு எழுதிய மட-ல் ஆணையிட்டு கூறுவது போல்.

“வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்” (2 திமோ 4:1-2) நற்செய்தி அறிவிப்பதில் கருத்தாகவும் கண்டிப்பாகவும் இருக்க வேண்டும். இதே போன்று இறையாட்சி பணியாளர்களாகிய நாம் நமது சாட்சிய வாழ்வாலும் வார்த்தையாலும் இறைமகன் இயேசு நமக்கு அளிக்கும் நிறைவாழ்வை மற்றவர்களும் பெறுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளோம். ஆவியின் வல்லமையோடு, கனிவு, அன்பு கொண்ட கடவுளின் முகத்தை எல்லா மக்களும் முக்கியமாக கடைநிலை ஏழைகளும் உணரும்படி செய்ய வேண்டும். இதனால் இறையாட்சி புத்துணர்வுடன் மலரும். “என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேரவகை கொள்கிறது” என்ற நம் அன்னை மரியாவின் பெருமகிழ்வு கொண்ட நம்பிக்கையுடன் இயேசுவின் மதிப்புமிக்க சீடர்களாக எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி இறைவனிடம் சரணடைவோம் என்பது இந்திய ஆயர்களின் சுற்றறிக்கை மட-ன் சுருக்கமாகும்.

பொதுநிலையினருக்கு இணையதளம் வழியாக தொலைதூரக் கல்வியளிக்க **GOAL (Go Out And Lead)** என்ற இணையதளம் உருவாக்கப்பட உள்ளது. அதன் விதிமுறை மேற்கொள்ளவிருக்கும் தலைப்புகள் செயல்முறைகள் பற்றி விவாதிக்கப்பட்டது **goalccbilaity@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஏதேனும் விளக்கங்கள் இருந்தால் அளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது.

ஐந்தாம் அமர்வில் திருஆட்சியாளர்கள் துறவரத்தாருடன் இணைந்து பொதுநிலையினர் தங்கள் பொறுப்புகளை எவ்வாறு பகிர்ந்துகொள்ளலாம் என்று திரு. அட்ரியன் ரொசாரியோ அவர்கள் விளக்கினார்கள். குறைவான சாதாரணமான உன்னதமான செயல்பாட்டு **(Maximise)** மனிதர்கள் என்ற மூன்று வித மனிதர்கள் பற்றிய விளக்கங்களில் உன்னதமான செயல்பாடுகளில் வெற்றிபெறும் மனிதர்கள் எவ்வாறு மற்றவர்களை இணைத்து மற்றவர்களுக்குப் பொறுப்புகளை அளித்து கூட்டுச் செயல்பாட்டில்

எப்படி வெற்றியை விரைவில் எட்டமுடியும் என்ற கருத்துடன் கலந்தாய்வு செய்தார்கள்.

முடிவாக ஆயர் அவர்கள் தங்கள் இறுதி உரையில் மூவொரு கடவுளின் புனிதமான உறவு ஒன்றிப்பு நமக்கு மாதிரியாக அமைந்துள்ளது. திருமுழுக்கின் மூலம் அனைவரும் ஒன்றாக அழைக்கப்பட்டுள்ளோம். பொதுநிலையினருக்கு சரியான உருவாக்கம் அளிக்கப்படவேண்டும். அனைவரும் ஒரே ஆவியினால் பல உறுப்புகளாலான ஒரே உடலாக ஆக்கப்பட்டுள்ளோம். (1 கொரி 12) அனைத்து உறுப்புகளும் சம மாண்புடன் பல வேற்றுமைகளுடன் ஒன்றாக இணைந்து ஒன்றோடு ஒன்றாக மதிப்புடன் செயல்படுகின்றன. அதேபோல நாமும் பொதுக்குருத்துவத்திலும் பணிக்குருத்துவத்திலும் பல்வேறு நிலைகளில் ஒன்றாகப் பணியாற்றுகிறோம். படைப்பின் முழுமையில் வேற்றுமைகள் கொணட்டாடப்பட்டு பாராட்டப்பட வேண்டும். அன்பு பிணைப்பு ஒன்றே இதன் அடிப்படை. இந்த அடிப்படையில் நாம் ஒருங்கிணைந்து உன்னதமாக மறைபரப்பு மாதத்தைக் கொண்டாடுவோம். ஒவ்வொரு பங்கிலும் பங்குப் பேரவை உருவாக்கப்பட வேண்டும். முழு ஒத்துழைப்புடன் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள வேண்டும். ஏழை மக்களிடமும் புறந்தள்ளப்பட்டவர்களிடமும் அன்புடன் உறையாடி மகிழ்வுடன் உறவாடுங்கள். நற்செய்தி நம் உடல் ஆன்மாவோடு ஒன்றுபட்டு இருக்கட்டும் என்று ஆசீர் அளித்து அமர்வுகளை நிறைவு செய்தார். அகில இந்திய ஆயர் பேரவையின் பொதுநிலையினர் பணிக்குழு தேசிய கருத்தரங்கில் கலந்துக்கொள்ள ஊக்குவித்த ஆயர் தந்தை அவர்களுக்கும், மேதகு முனைவர் தந்தை அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. **S.பெலவேந்திரம்**
செயலர்
பொதுநிலையினர் பணிக்குழு

## B.DESIGN EDUCATION IN IIT

## To Higher Secondary Students

நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களான ஐஐடி மும்பை, ஐஐடி கவுஹாத்தி, ஐஐடி ஹைதராபாத், ஐஐடிடிஎம் ஜபல்பூர் ஆகியவற்றில் குறைந்த கல்விக் கட்டணத்தில் நான்காண்டு பி.டெஸ் படிக்க விரும்பும் மாணவர்கள், UCEED (Undergraduate Common Entrance Exam for Design) எனும் நுழைவுத் தேர்வை எழுத வேண்டும்.

சிவில் ஆட்டோமொபைல்ஸ், ரோபோட்டிக்ஸ், டெ- கம்யூனிகேஷன்ஸ், எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ், ஃபேஷன், கம்யூனிகேஷன் என அனைத்து துறைகளிலும் டிசைன் என்பது முக்கிய அங்கமாக இருக்கிறது. உயர்ந்த ஊதியம் பெற்றுத்தரும் பணியாக உள்ளது.

கல்வித்தகுதி :

2019 ஆம் ஆண்டில் கணிதவியல், அறிவியல், கலையியல், வணிகவியல், மானுடவியல் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில், பிளஸ்டூ வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2020 ஏப்ர-ல் பிளஸ்டூ தேர்வு எழுத இருப்பவர்களும் தேர்வை எழுதலாம். பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு பொறியியல் துறையில் மூன்றாண்டு டிப்ளமோ படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணம் :

விண்ணப்பக்கட்டணம் 3 ஆயிரம் ரூபாய் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் அனைத்துப்

பிரிவுகளைச் சேர்ந்த பெண் விண்ணப்பதாரர்களுக்கு ரூ.1500 ஆன்லைன் முறையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

நுழைவுத்தேர்வு :

ஆன்லைன் மற்றும் காகிதத்தில் எழுதும் முறையில் மூன்று மணி நேரம் நடைபெறும். இந்த நுழைவுத்தேர்வு, பகுதி – அ, ஆ என இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. பகுதி – அ எழுத்து தேர்வு. இந்த நுழைவுத் தேர்வானது சென்னை உள்பட நாட்டில் உள்ள 24 முக்கிய நகரங்களில் நடத்தப்படும்.

விண்ணப்பிக்கும் முறை :

ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். அண்மையில் எடுக்கப்பட்ட நிழற்படம், ஸ்கேன் செய்யப்பட்ட கையொப்பம், பிளஸ்டூ தேர்ச்சி சான்றிதழ், தற்போது பிளஸ்டூ படித்துக்கொண்டிருப்பவர்கள் எனில் பள்ளியில் பெற்று படிப்புச சான்றிதழ், தேவைப்படின் சாதிச்சான்றிதழ் ஆகியவற்றை ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிக்க கடைசி தேதி : 09.11.2019

500 ரூபாய் அபராதத்துடன் விண்ணப்பிக்க கடைசி தேதி : 16.11.2019

நுழைவுத் தேர்வு நடைபெறும் தேதி : 18.01.2020

விவரங்களுக்கு : **www.uceed.iitb.ac.in/2020**

அருள்பணி **சு.லூர்துசாமி**
அலைபேசி எண். 9487321179

## Birthdays

| | | |
|---|---|---|
| 1. | Fr. M. Rayappa | 03-11-1940 |
| 2. | Fr. B. Edwin Savariyappa | 05-11-1980 |
| 3. | Fr. S. Arulappan | 06-11-1958 |
| 4. | Fr. Y. Arockiasamy | 08-11-1958 |
| 5. | Fr. Yesuraj | 08-11-1964 |
| 6. | Fr. S. Irudayaraj | 08-11-1973 |
| 7. | Fr. S. John Bosco | 09-11-1949 |
| 8. | Fr. S. Anbalagan | 18-11-1980 |
| 9. | Fr. I. Jeevagan | 19-11-1985 |
| 10. | Fr. S. Lua Thomas | 25-11-1978 |
| 11. | Fr. S. Richard Pereira | 25-11-1978 |

## Intentions

Let us pray that a spirit of dialogue, encounter, and reconciliation emerge in the Near East, where diverse religious communities share their lives together.

## Calendar

01 Fri All Saints day, Sol

02 Sat All Souls Day

**03 Sun 31st Ordinary Sunday**

09 Sat The Dedication of the Lateran Basilica in Rome, Feast

| | | |
|---|---|---|
| 10 | Sun | **32nd Ordinary Sunday** |
| 15 | Fri | St. Albert the Great, Bp., Rel., Dr. |
| **17** | **Sun** | **33rd Ordinary Sunday** |
| 18 | Mon | Dedication of the Basilica of St. Peter & St. Paul |
| 21 | Thu | Presentation of the Blessed Virgin Mary, Mem |
| 22 | Fri | St. Cecilia, Vir, Mr, Mem |
| **24** | **Sun** | **Our Lord Jesus Christ, King of the Universe, Sol** |
| 30 | Sat | St. Andrew, AP Feast |

## Necrology

| | | |
|---|---|---|
| 1. | Rev. Fr. George Paetta SDB | 02.11.1978 |
| 2. | Rev. Fr. Jesurathinam | 05.11.1995 |
| 3. | Rev. Fr. Stephen Bernard SDB | 07.11.1997 |
| 4. | Rev. Fr. Thomas Selvam SDB | 08.11.1973 |
| 5. | Rev. Fr. George SDB | 09.11.1976 |
| 6. | Rev. Fr. Victor SDB | 10.11.1960 |
| 7. | Rev. Fr. Joseph Murphy SDB | 14.11.1971 |
| 8. | Rev. Fr. Francis Ardusso SDB | 14.11.1994 |
| 9. | Rev. Fr. Joseph SJ | 17.11.1991 |
| 10. | Rev. Fr. S. Velankanni | 20.11.1982 |
| 11. | Rev. Fr. Amirthanathan | 22.11.1996 |
| 12 | Rev. Fr. Joseph Koorkamattam | 23.11.1953 |
| 13 | Rev. Fr. Ignatius Muthu SDB | 23.11.1967 |
| 14 | Rev. Bro. Thomas SHJ | 25.11.1981 |

**R. I. P**

In your charity Kindly pray for the repose of the soul of **Mrs. Savariammal** beloved elder sister of Rev. Fr. Christopher, SDB., Director of Aruludhayam Ashramam (Salesian Vellore Regional Director of Youth) who passed away on 17 October 2019. May her soul rest in peace!